# துரையபபபா மனுதளளுபடி: பிரிவிகவுன்சில் விளக்கம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 48

மலர் 9 இதழ் 29

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 27 ஜுல்கஃ 28 சனிக்கிழமை [11-3-67]

கொழும்பு, வெள்ளி

'1966-ம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் மாநகரசபை உள்ளூராட்சி மந்திரியினல் கலைக்கப்பட்டது செல்லுபடியாகாதென்று தீர்ப்பளித்திருக்கமுடியும் என்று நாங்கள் தெளிவாகக் கருகின்ருேம். இது ஆட்சேபமனு தாக்கல் செய்த மனுதாரரை பொறுத்தே அமைந்திருக்கும். மாநகரசபையே மனுவைத் தாக்கல் செய்திருப்பின் அப்படித் தீர்ப்பளிப்பது சாத்தியமாகியிருக்கும். ஆனல் மாநகரசபை மனு வைத்தாக்கல் செய்திருக்கவில்லை. மனுதார் சபை கலைக்கப்பட்ட பொழுது அதன் மேயராக இருந்திருக்கிருர் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் அதன் காரணமாக அவருக்கு புகார் செய்வதற்கு உரிமையில்லை.'

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபை உள்ளூராட்சி மந்திரியால்கலைக்கப்பட்டது சம்பந்தமாக முன்னுள்

[6-ம் பக்கம் பார்க்

# யாழ்நகரில் ஆலயப்பிரவேசம் வீரமாகாளி அம்மன் தரிசனம்

## 'தேர்தல் நடந்தால் சிறிமா பிரதமராவார்'

### யாழ். நகரில் மாஜிமந்திரி மகமூத்

யாழ்ப்பாணம், சனி

''இன்றுள்ள நிலைமையில் பொதுத்தேர்தல் நடந்தால் கூட திருமதி சிறிமா பண்டாரநாயக்க பிரதமராகிவிடுவார். அந்த அளவில் தேசிய அரசாங்கத்தில் மக்கள் பெறுப்படைந்துள்ளனர்.''

ஜின்னுமைதானத்தில் நேற்றிரவு நடந்த இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி கூட்டத்தில் சுதந்திர கட்சி பிரமுகரும் முன்னுள் கல்வி மந்திரியுமான ஜனுப் பதியுதின் மகமத் பேசும் பேசும் போது மேற்கண்டவாறுகூறினர்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி யாழ். கிளைத்தலைவர் ஜனுப் அப்துல் மஜித் தலைமையில் நடந்த இக்கூட்

[6-ம் பக்கம் பார்க்க]

## திருநெல்வேலியில் இரு ஆலயக் கதவுகள் மூடின

[ நமது நிருபர் கா. யோகநாதன் ]

யாழ்ப்பாணம்,சனி

யாழ்ப்பாண நகரில் நல்லூர்க்கந்தசுவாமிகோவிலுக்கு சமீபமாகவுள்ள வீரமாகாளிஅமமன் கோவில் நேற்று ஹரிஜனங்களுக்காக திறந்துவிடப்பட்டது. அமைதியாக இந்த வைபவம நிகழ்ந்தது. ஆனல் திருநெல்வேலியில் இரு ஆலயக் கதவுகள் மூடிக் கொண்டன.

வழக்கமாகபக்தர்கள் வழிபடுவதற்காக திறந்து விடப்பட்ட திருநெல்வேலி காயரோகனீஸ்வரர் சிவன்கோவிலும், அம்மன் கோவிலும் நேற்று காலைமுதல் மூடப்பட்டுள்ளது. இதன்காரணமாக வழக்கமாக உள்மண்டபத்திற்குள் சென்று வழிபடுபவர்களும் நேற்றுக் காலை வெளிவாசலில் நின்றே வழிபாடு செய்தனர்.

சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணியினரின் ஆலயப்பிரவேச முயற்சிதான் இக்கோவில் கதவடைப்புக்குக் காரணம். நேற்று காலை 6 மணிக்கு இவ்விரு கோவிலுக்கும் வழிபடச் சென்ற ஐக்கிய முன்னணி கோஷ்டியினர், கதவு அடைக்கப்பட்டிருந்ததால் திரும்பிச்சென்றனர். இக்கோஷ்டி பின்பு வீரமாகாளியம்மன் கோவிலுக்குள் சென்று வழிபாடு செய்தது. அக்கோவில் அர்ச்சகர் அவர்களை அன்புடன் வரவேற்று அரிச்சனைசெய்து பிரசாதம்

(6ம் பக்கம் பார்க்க)

## 'கதவு திறந்திருக்கும்போது சென்று வழிபடுவோம்'

### ஐக்கிய முன்னணித் தலைவர் சொல்கிருர்

யாழ்ப்பாணம், சனி

'கோவில் கதவு மூடப்பட்டிருந்தபடியால்தான் உள்ளே சென்று வழிபடவில்லையென்றும் சில தினங்களில் மீண்டும் திருநெல்வேலி சிவன்கோவிலுக்குள்சென்று நமது தொண்டர்கள் வழிபடுவார்களென்றும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் என்னிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

கதவைஉடைத்துப்பலாத்காரமாக உள்ளே சென்று எங்கள் தொண்டர்கள் வழிபடமாட்டார்கள். கதவு திறந்திருக்கும் போது வழக்கமாக மண்டபத்திற்குள் வழிபடச் செல்லும் மக்களுடன் நமது தொண்டர்களும் உள்ளே சென்று வழிபடுவார்கள். எப்பொழுது என்று கூருமல், திடீரென நமது தொண்டர்கள் விரைவில் அக்கோவிலுக்குள் சென்று வழிபடுவார்கள்.

திருநெல்வேலி சிவன் கோவிலுக்குள் சென்று வழிபட நேற்று மீண்டும் முயற்சிக்கவில்லையென்றும், சில தினங்களில் இது நடைபெறுமென்றும் அவர் கூறினர்.

## திடீர் ஊர்வலம்; பொலிசார் கலைத்தனர்

யாழ்ப்பாணம், சனி

சுதந்திரக்கட்சிப் பிரமுகரான முன்னுள் கல்விமந்திரி ஜனுப் பதியூதின் மகமூதையும், அவருடன் வந்தகோஷ்டியையும் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்காக, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு முன்னல் திரண்டிருந்த வாலிபர் கூட்டத்தைபொலிசார் நேற்றுக்காலை குறுந்தடிப் பிரயோகம்

[6-ம் பக்கம் பார்க்க]

அருந்துங்கள்!

பால் சபையின் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய பால்




குளிர்ச்சியூட்டத் தேவையற்ற பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வேள்விகள் புரிந்தால் மட்டும் போதாது. உள்ளத்துள்ளும் இறைவனை உணர்தல் வேண்டும். அந்த உணர்வுடன் அவனை ஓதினால் துன்பங்கள் தூளாகும்.

— அப்பர் சுவாமிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஞு மாசி மீ 27 (11-3-67)


## மீண்டும் வகுப்புவாதம்

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக வகுப்புத் துவேஷப் பிரசாரத்தில் இங்குள்ள தலைவர்கள் ஈடுபடுவது புதிதல்ல. 'வகுப்புவாதக் கட்சி' என்று ஒருகாலத்தில் கருதப்பட்ட திராவிடமுன்னேற்றக் கழகம் வகுப்புவாதப் போக்கைக் கைவிட்டதுகண்டு அங்குள்ள மக்கள் அதை ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்திருக்கிறார்கள். அதன் வெற்றியை இங்கு 'அரசியல் மூலதனமாக்கி' வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி உபதேர்தலில் வெற்றிபெற முயற்சிப்பது 'அரசியல் கீழ்த்தரச் செயல' என்பதைத் தெரிந்திருந்தும் அதையே இங்கு சிலர் செய்து வருகின்றனர். வகுப்புத் துவேஷத்தை வைத்து 'அரசியல இலாபம்' சம்பாதித்துக்கொள்ளட்டும். ஆனால் அரசியலுக்காகக் கிளப்பிவிடும் வகுப்புவாதம் அரசியலுடன் நின்றுவிடாது நாட்டின் அமைதியைக் குலைத்து உருவாகிவரும் தேசிய ஐக்கியத்தைச் சீரழித்துவிடுமென்பது நாட்டின் நலனில் அக்கறையுடையோரின் மனதில் அச்சத்தை ஊட்டுவதாகும்.

தமிழ்நாட்டில் தி. மு. கழகம் பெற்ற வெற்றியை இலங்கையில் தமிழரசுக்கட்சியுடன் முடிச்சுப்போட்டு 'வகுப்புத் துவேஷப் பிரசாரம்' செய்ததனால் கொலன்னாவை உபதேர்லில் கிடைத்த வெற்றி தெவிநுவரைத் தொகுதி உபதேர்தலிலும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா துவேஷப் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு ஊக்கமளித்திருக்கிறது. உபதேர்தல் வெற்றிகள் பொதுத் தேர்தலுக்கும் வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பவும் உற்சாகமளிக்கலாம். அதன் விளைவு நாட்டைச் சீர்குலைக்கச் செய்யக்கூடும்.

தி. மு. க. வெற்றி தொண்டமானையும் செல்வநாயகத்தையும் மகிழ்ச்சியிலாழ்த்தியிருப்பதாகவும் நாட்டைப் பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றுதிரளவேண்டும் என்றும் திருமதி சிறிமா கூறியிருக்கிறார். இந்த நாடு செல்வநாயகத்துக்கும் தொண்டமானுக்கும் சொந்தமில்லையா? வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பிவிட்டால் அதன் விளைவு எப்படியிருக்குமென்பதை 1958-ம்ஆண்டில் நடந்ததை அறிந்தவர்கள், நினைத்துப் பார்க்கவே அஞ்சுவர்.

சீர்குலைந்துபோன தேசிய ஒற்றுமையைச் சீராக்கி, நாட்டை முன்னேற்றுவதற்கு! பிரதமரும் தேசிய அரசாங்கமும் கொண்டுள்ள நல்ல நோக்கம் அரசியல் காரணமாகச் சிதைந்துபோய் விடக்கூடாது. வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுபவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இங்கு சட்டம் இருக்கிறது. வகுப்புத்துவேஷத்தைப் பத்திரிகைகள் மட்டும் அல்ல. அரசியல்வாதிகளும் சில அரசியல் தலைவர்களும் கூடத் தூண்டிவிடுகிறார்கள். பிரதமரைப்பற்றி அவதூறாக எழுதுவதும் பேசுவதும்தான் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிடும் செயல் எனப் பொலிசார் தவறாகக் கருதுவதாகவே தோன்றுகிறது. வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுபவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேசமயம் தி. மு. க. வெற்றியைக் கண்டு அச்சம் தெரிவிக்கும் மக்களின் மனதில் பீதியை ஏற்படுத்துவதுடன் இங்குள்ள ஒரு சமூகத்தினருக்கெதிராக துவேஷத்தைத் தூண்டிவிடுபவர்களையும் சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரதிநிதிகளையும் பிரதமர் அழைத்துப்பேசி, அவர்களது அச்சத்தை நீக்க முயற்சி செய்வதுடன் வகுப்புத் துவேஷப் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஆசிரியர்களின் சேவையை மறப்பது அழகல்ல

6-3-67 'ஈழநாடு' பத்திரிகையில் 'நல்வழிகாட்டும் நல்லாசிரியன்' என்ற தலைப்பில் 'வழிப்போக்கன்' நாட்டிலும் நகரிலும் நடக்கின்ற சமுதாய ஊழல்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி சீர்திருத்தும் நோக்கத்துடன்சில கருத்துக்களை வரையும்போது, பல தப்பான கருத்துக்களை மிகைப்படக்கூறி, பொதுப்பட ஆசிரியசமுதாயத்தின்மீது வீண்பழிசுமத்த முயன்றிருப்பது வருத்தப்படவேண்டியதாகும். 'ஆசிரியர் மற்றையோருக்கு வழிகாட்டியாய் இருத்தல்வேண்டும்; இளம் மாணவர்கட்கு முன்மாதிரிகாட்ட வேண்டும்' என்பது இலட்சியத்துடன் நின்று விடவில்லை. பலர் அப்படியே வாழ்ந்து வழிகாட்டுகின்றார்கள். இந்தப் பொறுப்பும் புனிதமும் சமுதாயத்தில் ஆசிரியர்கட்கு மாத்திரம் அல்ல, பல்வேறு துறைகளில் பணிபுரிபவர்கட்கும் தத்தம் நிலைக்கேற்ப உண்டுதான். ஆனால் அங்குமிங்குமாகச் சிலகுறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆசிரியர்கள் மாத்திரம் தவறிழைப்பவர்கள் அல்லர். மற்றைய துறைகளிலே பணிபுரிபவர்களிடையேயும் தவறுகளும் ஊழல்களும் இருக்கத்தான்செய்கின்றன. தினசரி எத்தனையோ பொது ஊழியர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவதையும் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுவதையும் காண்கிறோம். ஆனால் ஆசிரியர்கள் அக்கட்டத்தில் இல்லையெனக் கூறலாம்.

'சங்கக்கடைகளில் ஆசிரியர்கள் தவறுகள் பற்றிக் கூறுகிறார். அவ்விடங்களில் நடைபெறும் தவறுகட்கு ஆசிரியர்கள் மாத்திரமல்லாது அதில சம்பந்தப்பட்ட வேறுபலரும் பொறுப்பாக இருக்கும்போது, ஆசிரியர்கள் மாத்திரம் ஏன் தனிப்பட்ட கண்டனத்துக்கு ஆளாகவேண்டும். தவறு இழைப்பவர் எவராயினும் சரி, அவர்களை அவ்விடங்களிலிருந்து உடனடியாக நீக்குவது அங்குள்ள அங்கத்தவரது பொறுப்பன்றோ?

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம்இவ்வளவிற்குவளர்ந்திருப்பதற்குஆசிரியர்களே பெருமளவிற்குப் பொறுப்புடையவர்களென்பதிற் சந்தேகமில்லை. கூட்டுறவுஇயக்கத்தின் முன்னணியிலே சிறந்து விளங்கியவர்களும், விளங்கி வருபவர்களும் ஆசிரியர்கள் என்பதையும் ஒரு சிலரின் தவறுகளுக்காகப் பெரும்பாலோர் செய்த சேவையை மறப்பதும் அழகல்ல. இதுமாத்திரமல்லாது சமுதாயத்தில் பல்வேறு சமூக கலாச்சாரநிறுவனங்களிலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் ஆசிரியர் பலர் பணியாற்றுகின்றனர்.

பஞ்சப்படியோ, விசேஷ பஞ்சப்படியோ ஆசிரியர்கள் முன்பும் பெற்றார்கள், வேறு எந்த அரசாங்க ஊழியரும் பெறுவதுபோலவே பெறுகின்றார்கள். இதில் எதுவித சலுகையும் இல்லை. "ஓவர்டைம்" எந்த ஒரு ஆசிரியரும் பெறுவதில்லை. மற்றைய அரசாங்க ஊழியர் பெறும் பல வசதிகளையும் ஆசிரியர் பெறுவதில்லை. ஆசிரியர்கள் வருடத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட நாட்கள் விடுமுறை அனுபவிப்பவர்கள் என்று கூறுவதும் பொருத்தமற்றது. ஏனெனில் பாடசாலை வேலைநாட்கள் 180ல் இருந்து தற்போது 210 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் பாடசாலையில்மாத்திரம் வேலைசெய்பவர்கள் அல்லர். பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் பாடசாலை வேலைகள் பலவற்றைக் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆசிரியர்கள் "சுகபோக சீவியம் நடத்துபவர்கள் என்று கூறுவது தருமமாகாது. ஆசிரியர் தொழில் தற்காலத்தில் பாடம் கற்பித்தலுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. பாடம் கற்பித்தல் தவிர்ந்த பாடசாலைசம்பந்தமான தொழில்களை - மாணவர்களது வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்தல்போன்ற பலவற்றை ஆற்றவேண்டியவர்களாவர்.

**வி. சிவசுப்பிரமணியம்,**
வண்ணார்பண்ணை.

o

## துவேஷப்பேச்சு

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி போய்க்கொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த ஆசிரியர்கள் இருவர் பிரதமமந்திரி அவர்களை அவதூறாகப் பேசியதாக அதே பஸ்ஸில் பிரயாணம்செய்த துப்பறியும் பொலிஸ் அதிகாரி கைதுசெய்ததாகபத்திரிகையில் செய்திவந்துள்ளது.

மலைநாட்டிலும், கொழும்பு போன்ற இடங்களிலும் பஸ், ரயில் போன்ற பொதுமக்கள் பிரயாணம் செய்யும் அரசாங்கத்துக்கு சொந்தமான வண்டிகளில் தமிழ் சிங்களத் துவேஷங்கள் வளர்க்கப்படுவது குறித்தும் இவ்வாறு பொலிசார் கவனம் எடுப்பார்கள் என்றால் பெரிய காரியமாக இருக்கும்.

சில பகுதிகளில் பஸ்களில் படுமோசமான முறையில் துவேஷப்பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. இது பற்றி அரசாங்கமும் கவனம் எடுத்தால் மக்கள் நிம்மதியாகப் பிரயாணம் செய்ய வழிபிறக்கும்.

**பிரயாணி.**

## யாழ்ப்பாணம் எம். பி. யிடம் ஊழியர் குறைபாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்களத் தேர்ச்சியின்மையால் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் சம்பள உயர்ச்சிப் பணத்தை வழங்க முயற்சி எடுக்கும்படி சென்ற வியாழக்கிழமை காலை அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் சிறு சேவையாளர்கள், யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி, பொன்னம்பலத்தைக் கேட்டுக்கொண்டனர். இதுபற்றி சம்பந்தப்பட்ட மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக திரு. பொன்னம்பலம் வாக்குறுதியளித்தார்.

யாழ்ப்பாணம் தமிழ்க் காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்தில் மற்றும் பல சங்கங்கள் திரு. பொன்னம்பலத்தை சந்தித்து தங்கள்குறைகளைத்தெரிவித்துக் கொண்டன.

அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் நாளாந்த சம்பள ஊழியர்களும், திரு. பொன்னம்பலத்தைச் சந்தித்து தங்களுக்கு தொடர்ந்து வேலை வழங்க முயற்சி எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவில் வேலைசெய்துவந்தநாளாந்த சம்பள ஊழியர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருப்பதாகவும், மந்திரியின் சுற்றறிக்கைப்படி, இவர்களுக்கு வேறுவேலைவழங்கப்படவேண்டுமென்றும் திரு. பொன்னம்பலத்திடம் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் விஷயத்தையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசுவதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பாடசாலை ஊழியர்களும், திரு. பொன்னம்பலத்தை சந்தித்து தங்கள் குறைபாடுகளைத் தெரிவித்தனர். தங்களுக்குச் சம் [illegible] பென்ஷன் ஒழுங்குமுறை இல்லையென்றும் சேவைக்காலம் கணிக்கப்படுவதில்லையென்றும் தெரிவித்தனர். இவர்கள் குறைபற்றியும், கல்விமந்திரியுடன் பேசுவதாக அவர் தெரிவித்தார்.

---

### சிவராத்திரி விழாவில் காங்கிரஸ் தலைவர்கள்

கோண்டாவில், வெள்ளி

"தமிழர்களாகியநாம்இப்பேர்ப்பட்டசமயவிழாக்களை கொண்டாடுவதில் பெருமைப்படவேண்டும். முக்கியமாக படித்த இளைஞர்கள் இப்பேர்ப்பட்ட விழாக்களை கொண்டாடுவதற்கு முன்னின்று உழைப்பதைக்காணும் பொழுது நான்மிகவும்மகிழ்ச்சியடைகிறேன். இடைக்காலத்தில் ஒருசிலரால்புகுத்தப்பட்ட மூடநம்பிக்கைகளில் ஒன்றான சாதிவேற்றுமை, போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அந்நியரின் ஆதிக்க வெறியினால் எமது சமயத்தைப்புறக்கணித்துவேறுசமயத்தை தழுவியசிலரின் நடவடிக்கைகள் போன்ற காரணங்களாலேயேஇன்றுஎமது சமயம் குன்றியிருக்கின்றது. ஆகையால் எமது இனம், மொழி, சமயம்வாழவேண்டுமேயாகில் நாம் எமக்குள் இருக்கும் சாதி வேற்றுமையைப் பூண்டோடு அழிக்க வேண்டும்"

கொக்குவில்-மணியர்காடு ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் முன்றலில் மகாசிவராத்திரிவிழாவைமுன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் மேற்கண்டவாறுபேசினார்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி, பொன்னம்பலம் பேசுகையில்: வருங்காலத்தில் எமது இனம் தழைத்தோங்க வேண்டுமானால் நீங்கள் ஒவ்வொருவரும் இப்பேர்ப்பட்ட சமய ஆசாரங்களில்கலந்துகொள்ள வேண்டும்என்றார்.

## ஐயாறன் எழுதுவது

சிவராத்திரியன்று சில கோவில்களுக்குச் சென்றேன். அநேகமாக எல்லாக் கோவில்களிலும் மக்கள் திரளாகக்கூடி, பக்திசிரத்தையுடன் வழிபட்டனர். கீரிமலை சிவன்கோவில் தேர்த் திருவிழாவில் கண்ட பக்திக் காட்சிகள் என் மனதில் அப்படியே பதிந்துவிட்டன. சில இடங்களில் போட்டா போட்டியுடன் இவ்விழா நடைபெற்றது. சிறுவர்களும், தாய்மார்களும் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். பார்க்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

குருக்கள்மார்களுக்கு ஓய்வே இல்லை. அன்று இரவுபகலாகப் பூஜைகாரியங்கள். நேற்றுக் காலையிலே ஒரு குருக்கள் மிகக் களைப்பாக இருந்தார். அவரைக் கேட்டதற்கு, கண் தான் தூக்கமில்லாததால் எரிச்சலாக இருக்கிறதென்றார். குருக்கள்மார்களை யாரும் குறை கூறுவதும், கண்டிப்பதும் இக்காலத்தில் சர்வ சகஜமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் படும் கஷ்டங்களையும் குறைகளையும் பற்றி யார் கவனிக்கிறார்கள்?

முப்போதும் திருமேனி தீண்டும் அவர்கள் மனச் சந்தோஷத்துடன், திருப்தியாக வாழ சமூகம் வழி செய்துள்ளதா?

வேறு எதெதற்கோ எல்லாம் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. பல தொழில்களுக்கும் சம்பள நிர்ணயசபைகள் ஏற்பட்டுள்ளன. சமூகத்துக்கு மிக முக்கிய சேவைசெய்யும் பூசகர்கள், விலைவாசிகள் உயர்ந்துள்ள இக்காலத்தில் வாழ்க்கை நடத்துவதற்கான ஊதியம்பெறச் சட்ட வசதியெதுவும் இல்லை. பெரிய குடும்பங்களுள்ள சில பூசகர்கள் சுகாதாரமற்ற சின்னக்குடிசைகளில் வசித்து, மிகவும் சங்கடப்படுகிறார்கள். கேள்விமுறை இல்லை. இதனால் அவர்களில் பலரும் தங்களுடனே இந்த வேலை போதுமென்றும், தங்கள் குழந்தைகுட்டிகள் இங்கிலீஷ் படித்து வேறு உத்தியோகம் அல்லது லாபகரமான தொழில் செய்யவேண்டும் என்றே கருதுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கோவில்களுக்குக் கணக்கில்லை. நல்ல குருக்கள் கிடைப்பது அரிது. குருக்கள் பயிற்சிக்கான இலவச குருகுலங்கள், பள்ளிக்கூடங்கள் நடத்தியும், போதிய மாணவர்கள் அதில் சேர முன்வருவதில்லைஎன்று தெரிகிறது. போதிய ஊதியமின்றி, கண்டவர்களிடம் ஏச்சும் பேச்சும் கேட்க வேண்டுமென்ற நிலையில் இக்காலத்திலே யார்தான் விரும்பி இதற்கு முன்வருவார்கள்?

சமூகத்துக்கு முக்கியமான பல பணிகளிலும், ஆலய சேவை மிகப்புனிதமானது. மக்கள் திருவருள் பெற்று வாழ்க்கை உய்வதற்காக வருமிடம் அது. மன ஆறுதல்பெற ஆவலுடன் வருகின்றார்கள். ஆனால் அங்கே பணிசெய்யும் பூசகர் மனத் திருப்தியில்லாமல் பல பல விதங்களிலும் சங்கடப்படுவதாயின், அவர்கள் எப்படி பக்திசிரத்தையுடன் பூசை செய்யவோ, அக்கோவிலில் திருவருள் சுரக்கவோ முடியும்? [6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் சமாதான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவோம்

—ஜனாதிபதி ஜோன்சன்

நியுயோர்க், மார்ச் 10

வியட்னுமில் சமாதானம் காணும் முயற்சிகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் தமது செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பினர் உருவான சமாதான முயற்சியை எடுக்க முற்பட்டால் அமெரிக்காவும் தனது பங்கைச் செய்யத் தயங்காது என்ருர் அவர்.

**ஐ. நா. வுக்கு பாராட்டு**

வியட்னுமில் சமரசம் ஏற்படுத்த உலக ஸ்தாபனமான ஐ. நா. சபை மேற்கொண்டிடுக்கும் நடவடிக்கைகளை திரு. ஜோன்சன் பாராட்டினுர். உலக சமாதானத்துக்கு ஐ. நா. சபை பெரிதும் பாடுபடுவதாகவும், 1965-ல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே மூண்ட போரை நிறுத்த அது மேற்கொண்ட நடவடிக்கைகள் அதன் சேவைக்கோர் உதாரணம் என்றும் திரு. ஜோன்சன் தமது செய்தியில் கூறினுர்.

**பசிபிக் விஜயம்**

தமது ராஜ்யதுறை ஆலோசகர்களைச் சந்திப்பதற்கு திரு. ஜோன்சன் இம்மாத இறுதியில் பசிபிக் பிரதேசத்துக்கு விஜயம் செய்யவிருக்கிருர். ஆனுல், திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

# 'மக்கள் ஆலோசனை கேட்டு நடப்பேன்'

—சி. என். அண்ணுதுரை

சென்னை, மார்ச் 10

மக்களின் விருப்பங்களைச் சரியாக உணர்ந்துகொள்ளக்கூடிய முறையில், நிர்வாகக் கட்டுக் கோப்பு சீரமைக்கப்படுமென தமிழ் நாட்டு முதன் மந்திரி திரு. ஸி. என். அண்ணுதுரை தெரிவித்துள்ளார். தமது அரசாங்கம், தீர்க்கமுடியாதெனத்தோன்றும் பிரச்னைகளையிட்டுமக்களின் ஆலோசனையைக் கேட்டுப் பெறத் தயங்கமாட்டாது என்றும் அவர்மேலும் கூறியுள்ளார்.

சென்னை நகரின் குடிதண்ணீர்ப்பிரச்னை சம்பந்தமாக, காவேரித் தண்ணீரைக் கொண்டுவரும்கார்ப்பரேஷனின் ஆலோசனைக்கு முதலிடம் அளிக்கப்படுமென அவர் கூறியுள்ளார்.

**சாதிக் பாஷா**

வைத்திய கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதில் நிலவும் லஞ்சத்தைஒழிக்க, ஒரு விசேஷ கமிட்டி நியமிக்கப்படுமென்று சுகாதார மந்திரி திரு. சாதிக் பாஷா, பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

# திபேத்திய கலாச்சாரத்தை அழிக்கும்சீனச்செங்காவலர்

## காட்டு மிராண்டிகள் என தலாய்லாமா கண்டனம்

புதுடில்லி, மார்ச் 10

ஹிமாசால் பிரதேசத்தில் நடைபெற்ற திபெத்திய தேசிய எழுச்சித் தினத்தின் எட்டாவது வருடாந்தக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட திபெத்திய மதத்தலைவரான தலாய்லாமா, திபெத்தில் சீனர்களின் கலாச்சாரப்புரட்சி காட்டுமிராண்டித் தனமான முறையில் நடாத்தப்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டினுர்.

சீனக் கலாச்சாரப்புரட்சி என்றபோர்வையில் சீன ராணுவத்தினரும், செங்காவலர் படையினரும் திபெத்திய கலாச்சாரத்தைப் பல வகைகளிலும் ஒழித்துக்கட்டிவருவதாக தலாய்லாமா மேலும் கூறினுர்.

மக்களை இம்சைப்படுத்தித் [illegible]ன்புறுத்துவதாகவும், மதா[illegible]ங்களை மிருகத்தனமாக [illegible]த்து நொறுக்குவதாக [illegible]திபெத்திய கலாச்சா[illegible] சின்னங்களாகவிளங்கும் பண்டைய கட்டிடங்களையும், கலைக்கோவில்களையும் அழித்துவருவதாகவும் தலாய்லாமா சீனச் செங்காவலர்மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

இவர்களின் இக்காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை உலகத்திலுள்ள ஏனைய மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்களென தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

## [illegible]ன விபத்துக்கு [illegible] பேர் பலி

[illegible]ஹியோ, மார்ச் 10

[illegible]க்காவிலுள்ள ஒஹி[illegible] நேற்று நடை[illegible] விமானவிபத்தொன்[illegible] 6 பேர் மரணமா[illegible] ஒரு பிரயாணிகள்[illegible]மும், ஒரு தனிப் விமானமும் ஒன்ருே[illegible]று மோதிக் கொண் பிரயாணிகள் விமா[illegible] இருந்த 25 பேரும், [illegible] விமானத்தின் [illegible]பத்துக்குப் பலி

## மணிப்புரியில் காங்கிரஸ் ஆட்சி

மணிப்புரி, மார்ச் 10

மணிப்புரியில் காங்கிரஸ் மீண்டும் பதவியேற்கவிருக்கிறது. மொத்தம் 30 ஸ்தானங்களுக்கான சட்டசபைத் தேர்தலில், 29 வெளியாகிவிட்டன. இவற்றில் 16 காங்கிரஸ் கட்சியினுல் கைப்பற்றப்பட்டுள்ளன. சுயேச்சையாளர் 9ம், சம்யுக்த சோஷலிஸ்ட் மூன்றும், கம்யூனிஸ்ட் ஒன்றும் பெற்றுள்ளன.

## பள்ளிக்கூடத்தின் மீது இடி

டிரான்ஸ்வால், மார்ச் 10

தென்னுபிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வாலில் ஓர் இடத்தில் ஓர் ஆபிரிக்கப் பள்ளிக்கூடத்தின்மீது இடி விழுந்ததன் விளைவாக அதன் ஒரே ஆசிரியரும், 10 சிறுவர்களும் இறந்தனர். மற்றும் 12பேர் காயமுற்றனர். கட்டிடத்துக்கு அதிகம் சேதமில்லை.

## சுகர்ணே பற்றிய இறுதி முடிவு நாளை தெரியும்

ஜாகர்த்தா, மார்ச் 10

ஜனாதிபதி பதவியிலிருந்து சுகர்ணேவை உடனடியாக விலக்குவதுடன், அவரை விசாரணை செய்ய வேண்டுமென்றும், இதற்காக ஒரு விசேஷ நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமெனவும் இந்தோனேஷிய மக்கள் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் பெரும்பான்மையோர் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்கள். சுகர்ணேவைப்பற்றிய இறுதித் தீர்மானங்களை இவ்ஆலோசனைக்குழு, நாளை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோனேஷியாவின் அடுத்த தேர்தல் வரை, ஜெனரல் சுஹார்ட்டோ ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

## தென்அமெரிக்காவுக்கு பாப்பரசர் விஜயம்

வத்திக்கான், மார்ச் 10

பாப்பரசர் போல் அடுத்த மாதம் தென்அமெரிக்காவுக்கு விஜயம் செய்வார் எனத் தெரிகிறது. ஆனுல் இது உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.

## இந்தியாவுக்கு அமெரிக்க உதவி

நியூயோர்க், மார்ச் 10

இந்தியாவுக்கு அவசர உணவு அனுப்பும் ஜனாதிபதி ஜோன்ஸனின் உதவித்திட்டம், அமெரிக்கப் பிரதிநிதிகள்சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## ஆந்திர மேல்சபை

ஹைதராபாத், மார்ச் 10

ஆந்திர பிரதேச மேல் சபை இம்மாதம் 20-ம்திகதி ஹைதராபாத்தில் கூடவிருக்கிறது.

## ராஜஸ்தானில் மாஜிஸ்திரேட்விசாரணை

ஜெப்ய்பூர், மார்ச் 10

சென்ற செவ்வாய்க்கிழமை ஜெய்பூரில் நடந்த பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின்மீது மாஜிஸ்திரேட் விசாரணை நடாத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நகரில் நிலவும் 24 மணிநேர ஊரடங்குச்சட்டத்தில் நேற்றும் இன்றும் காலையும் மாலையும் மும்மூன்று மணித்தியாலங்கள் விலக்கப்பட்டபோதும், அமைதி குலையவில்லை.

## பிரிட்டிஷ்-ருமேனிய உடன்படிக்கை

லண்டன், மார்ச் 10

பிரிட்டனும், ருமேனியாவும் ஒரு விஞ்ஞானதொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இவ்வுடன்படிக்கையின்கீழ் இவ்விரு நாடுகளும் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளில் பரஸ்பரம் கருத்துக்கள்ஆராய்ச்சிகள் பரிமாறிக்கொள்ளும்.

## அமெரிக்கா ஒப்புக்கொண்டது

நியூயோர்க், மார்ச்.10

வடவியட்னுமுக்கு எதிராக நடாத்தப்படும் விமானத்தாக்குதலுக்குத் தாய்லாந்திலுள்ள தளங்களைப் பயன்படுத்துவதாக அமெரிக்கா [illegible]

# லஞ்ச ஊழலை ஒழிக்க நடவடிக்கை

## புதிய எதிர்க்கட்சி மந்திரி சபைகள் தீர்மானம்

புதுடில்லி, மார்ச் 10

காங்கிரஸல்லாத மந்திரி சபைகள் பதவியேற்ற, ஒரிஸா, பீஹார், மேற்குவங்காளம், பாகிஸ்தான், கேரளம், தமிழ்நாடு ஆகிய ராஜ்யங்களின் முதன் மந்திரிகள் தமது அரசாங்கங்கள் கைலஞ்சம், ஊழல்கறுப்புச்சந்தை வியாபாரம் ஆகிய தீமைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்குமென உறுதியளித்துள்ளார்கள்.

**ஒரிஸா**

ஒரிஸா முதன்மந்திரி திரு. ஆர். எம். ஷிண்டே, முதலில் ஒரிஸா ராஜ்யத்தின் நிலைமையைச் சீரமைக்க முயற்சிகள் எடுக்கப்படுமென்று கூறினுர். விவசாயிகளுக்கு மேலும் ஊக்கமளிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

**பீஹார்**

பீஹார் முதன்மந்திரிதிரு. மஹாமாயபிரஸாத் சின்ஹா பீகாரில் தற்போது நிலவும் வரட்சி நிலையைமாற்றி, பீஹாரை முன்னேற்றத் தனது மந்திரி சபை துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

**பஞ்சாப்**

பஞ்சாப்முதன்மந்திரி திரு. குர்ணும் சிங், கைலஞ்சம், கள்ளச்சந்தை ஆகியவற்றை ஒழித்துக்கட்டத்தனது அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுமெனத் தெரிவித்துள்ளார்.

**கேரளம்**

கேரள முதன்மந்திரியான திரு. ஈ. எம், எஸ். நம்பூதிரிபாத், லஞ்சஊழலை நீக்குவதற்குத் தனது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஏற்கனவே அறிவித்துள்ளார்.

**தமிழ்நாடு**

லஞ்ச ஊழல் ஒழிப்புபற்றி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் விடுத்த அறிக்கையைத் தாம்மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாகத் தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரையும் ஏற்கனவே தமது கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

கேரள மந்திரி சபையில்

# அரசியல் பிரித்த தம்பதிகளை கவர்னர் ஒன்று சேர்த்தார்

திருவனந்தபுரம், மார்ச் 10

அரசியல் பிரித்துவைத்த தம்பதிகளை கேரளகவர்னர் ஸ்ரீ பகவான் சகாய் ஒன்று சேர்த்து வைத்தார்.

கேரளத்தில் 13 மந்திரிகளும் விசுவாசப்பிரமாணம் செய்துகொண்டு பதவி ஏற்றனர். பின்பு அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்காக கவர்னர் சகாய் தயாராஞர். இடதுசாரி கம்யூனிஸ்ட் மந்திரி திருமதி செளரிக்கும், வலதுசாரி கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்த மந்திரியான அவரது கணவர் திரு. டி. வி. தாமஸுக்கும் மத்தியில் முதல் மந்திரி திரு. நம்பூத்திரிபாட் நிற்பதைப்பார்த்து கவர்னர் சகாய் பொறுக்காது, திரு. நம்பூத்திரிபாட்டை தனது பக்கத்தில் இழுத்துவைத்துக் கொண்டார். இந்நிலையில் திருமதி செளரிக்கு அவருடைய கணவருக்குப் பக்கத்தில் நிற்பதைத் தவிர வேறுவழியில்லாமல் போய்விட்டது. திருமதி செளரியும் புதுமணப் பெண்ணைப் போல மிகவும் பணிவுடன் தனது வலது சாரிக் கணவருக்கு வலதுபக்கத்தில் போய் நின்ருர். இந்நிலையில் படம் பிடிக்கப்பட்டது.

ஆனுல் இடதுசாரி மனைவியும், வலதுசாரி கணவரும் ஒரே வீட்டில் வசிக்கமுடியாது என்ற கொள்கையை மார்க்ஸிய கட்சியினர் முன்வைத்துள்ளார்களாம். மந்திரிகளான திருமதி செளரியும், திரு. தாமஸும் தனித்தனியாகப் பிரிந்து வாழ்வதற்கு தனித்தனி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## கர்ப்பிணியிடம் தாலிக்கொடி திருட்டு

### ஒருவர் கைது

கொத்மலை, வெள்ளி

திருமதி பெரியசாமிமனே ரஞ்சிதம் என்ற கர்ப்பிணி தமது வீட்டில் தனியாகஇருந்த சமயத்தில் முகமூடியணிந்த ஒருவர் அவர் இருந்த அறைக்குள்சென்று அவரணிந்திருந்த சுமார் பதின்மூன்று பவுண் எடையுள்ள தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியதாக நாவலப்பிட்டி பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸார் எடுத்த நடவடிக்கை காரணமாக கண்டியிலிருந்து துப்பறியும் நாய் வரவழைக்கப்பட்டு தேடுதல் செய்யப்பட்டபோது துப்பறியும்நாய் சீமான் என்ற நபரைத் தேடிப்பிடித்துள்ளது. இந்த நபரைப் பொலிஸார் ரிமாண்டில் வைத்துள்ளனர்.

## எடுத்துச் சென்ருர் ஆனுல்....?

சுழிபுரம், வெள்ளி

ஆஸ்பத்திரியொன்றில் தனது தந்தையைப் பார்க்கச் சென்றவரிடமிருந்து "இதோ கொண்டுவருகிறேன்" என சைக்கிளைப் பெற்றுச்சென்றவர் ஐந்து தினங்களாகியும் இன்னமும் உரியவரிடம் சேர்ப்பிக்கவில்லையாம். இதுசம்பந்தமாக பண்ணுகம் தெற்கைச் சேர்ந்த திரு. ச. பாலசுப்பிரமணியக்குருக்கள் சங்கானைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்,

## இளைஞர் தற்கொலை

சாவகச்சேரி, வெள்ளி

மீசாலைறைச் சேர்ந்த ஆறுமுகம் இராசரத்தினம் [29வயது] என்பவர் தற்கொலை செய்து கொண்டார். இவர் எழுதி வைத்துள்ள கடிதமொன்றில் தான் உலகில் வாழ்ந்து எவருக்கும் பிரயோசன் மில்லையெனக் குறிப்பிட்டுள்ளார். விசாரணை முடிவில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே திரவியநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு அரசாங்க செயலகத்தில் கடமையாற்றியதிரு. தணிகாசலம் சண்முகநாதன் இம்மாதம் முதல் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகள் அதிருப்தி

பண்டத்தரிப்பு, வியாழன்

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கிளம்பும் புகை மண்டலம் தெற்கு நோக்கி வருவதால் இங்கு வெற்றிலை, புகையிலை ஆகிய பயிர்களில் தூசி படிந்து பயிர்களை நாசமடையச் செய்வதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர். இதனால் விவசாயிகள் பெரும் அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

## ‘கூட்டுறவுஇயக்கம் இயங்கவழி’

யாழ்ப்பாணம், வெள்ளி

‘தமக்குத் தேவையானபண்டங்களை மாத்திரம் வாங்குவதற்குத் தான் கூட்டுறவுப் பண்ட சாலையென்ற கருத்து நிலவுமானால் கூட்டுறவு இயக்கம்வளர்ச்சியுறாது’ என யாழ். கிழக்குகூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மதிபாலசிங்கம் வண்ணார்பண்ணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்டசாலையைச் சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர்மேலும்பேசுகையில், கூட்டுறவு இயக்கம் சீராக இயங்க நேர்மையும் கண்ணியமும் மிக அவசியமானவை யெனக் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திரு. மு. மகாலிங்கம் பேசுகையில், கூட்டுறவு இயக்கம் ஜனநாயக வாழ்வின் ஒரு முக்கிய அம்சமெனத் தெரிவித்தார். திரு. சோமஸ்கந்தன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. திரு. இரத்தினசிங்கம் நன்றி கூறினார்.

## அபராதமும் சிறையும

மாவிட்டபுரம், புதன்

ஏழாலையைச் சேர்ந்தஎஸ். இரத்தினம் என்பவர் சென்ற வருடம் ஜூலை மாதம் 26-ம்திகதி அதேயிடத்தைச் சேர்ந்த வீரசிங்கம் என்பவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகச் சுன்னாகம் பொலிஸாரினால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மல்லாகம் மாஜிஸ்ரேட் திரு. டி, எஸ். நிற்சிங்கா எதிரியை ஐம்பது ரூபாய் அபராதம் செலுத்தும் படியும் நீதிமன்றம் கலையும் வரை சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்

## 8பிள்ளைகளின் தந்தை தற்கொலை

சுழிபுரம், வெள்ளி

எட்டுப்பிள்ளைகளின் தந்தையான திரு. ச. தம்பிப்பிள்ளை என்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் தொல்புரத்தில நடந்துள்ளது.

வவனியாவில் கூட்டுறவுப் பரிசோதராகக் கடமையாற்றிய காலஞ்சென்றவரின் மரணவிசாரணையை வலிமேற்கு மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சேனாதிராசா நடத்தினார்.

காலஞ்சென்றவரின் மனைவி த. பகவதி, காலஞ் சென்றவரின் தாயார் ச. சின்னப்பிள்ளை, நா. மணியன், அ. முருகையா, தொல்புரம் கிராம சேவையாளர் மு. தர்மதாசன் ஆகியோர் சாட்சியமளித்தனர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது

## சிரமதானம்

துணுக்காய், வெள்ளி

மல்லாவி அரசினர் தமிழ் கலவன்பாடசாலையில் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் முயற்சியால் சிரமதான முறையில் பாடசாலைவளவு துப்புரவு செய்யப்பட்டது. இதற்கு திரு. செ. மயில்வாகனம் தலைமை வகித்தார்.

## பளையில் கோழிக்குஞ்சுகள்

பளை, வியாழன்

பளைப்பகுதியில் விவசாயப் பகுதியினரால் உயர் இன கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றன. விவசாய, உணவு உற்பத்தி மேற்பார்வையாளரின் முயற்சியினால் இப் பகுதி இளைஞர்கள் கோழி வளர்ப்பில் பெரிதும் ஊக்கம்காட்டிவருகின்றனர்

## தண்ணீர் வரிக்கு எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை பட்டின சபை எல்லைக்குள் தண்ணீர் வரியை உண்டாக்க வேண்டுமென உள்ளூராட்சிமன்ற நீர்வரி அறவிடும் பகுதி அறிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். எம். அல்பிரட் இதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார். திரு. அல்பிரட் அமைச்சர் திரு. திருச்செல்வத்தை சந்தித்து தண்ணீர்வரிக்கு எதிர்ப்புத்தெரிவித்தார்.

முருங்கன், வெள்ளி

முருங்கன் மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி சென்றவாரத்தில் நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டியில் ஐம்பதுக்குமதிகமான பாடசாலைகள் பங்கெடுத்தன,

## விசர் நாய் தொல்லை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியில் விசர் நாய்த் தொல்லை தாங்கமுடியாதிருக்கிறது. கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தினமும் விசர்நாய்கடிக்குள்ளாகிபலர் சிகிச்சைக்கு வந்துகொண்டிருக்கின்றனர். இது பற்றி நடவடிக்கை எடுக்கும் படி பொதுமக்கள் பொலிஸாரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.


50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந்தொகைக்கான காசோலையையும் பெறலாம்




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.


உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு:

சீட்டிழுப்பு இல. 133—16-3-67-ல் ஹொரணையில் நடைபெறும்.


1-வது பரிசு ரூ. 100,000 அல்லது புத்தம் புதிய ஹில்மன்மிங்ஸ் காரும் ரூ. 85, 750/- ரொக்கமும்.



2-வது பரிசு ரூ. 40,000 அல்லது புத்தம் புதிய ரலி எல்வ் காரும் ரூ, 24,850/- ரொக்கமும்.



3-வது பரிசு ரூ. 10,000 அல்லது புத்தம் புதிய மக்கோமிக் இன்டர் நாஷனல் B-275 ட்ராக்டர் (சிலோன் சேர்விஸ் & சப்ளையர்ஸ் கம்பெனி லிமிட்டெட்டின் உபசரணையுடன் கம்பெனி பட்டியலில் ரூ. 12,750/- ஆக விலை குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த ட்ராக்டர்) விசேஷமாக குறைக்கப்பட்ட விலையான ரூ. 10,000/-க்கு வழங்கப்படுகிறது.



இந்தக் கார்களையும், ட்ராக்டரையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்கு பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**பாடசாலைகளுக்கான நாடகப்போட்டி 1967**

**இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு**

இறுதித் திகதி
மே மாதம் 7-ந் திகதி

போட்டிவிதிகளுக்கு மார்ச் 20-ம் திகதிக்கு முன்னர் செயலாளர், இலங்கைக் கலைக் கழகம், 135, தர்மபால மாவத்தை, கொழும்பு-7, என்ற விலாசத்திற்கு எழுதவும். 2471

## ஆசிரியர் வென்றனர்

மீசாலை, வெள்ளி

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைவிளையாட்டுக் கழகத்திற்கும் சுன்னுகம்வடக்கு சனசமூகவிளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்றசிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 7-2 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எம். பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4காட்சிகள்
ரஞ்சன்
நடித்த
**மாயவீரன்**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
போயா தினங்களில்
4 காட்சிகள்
ரி. எஸ். பகவதி— ஜெயஸ்ரீ
**சம்பூரண மகாபாரதம்**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.—விஜயா
நடித்த
**தொழிலாளி**

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
Tippi Hedren
Sean Connery
in
MARNIE


## வெற்றிதோல்வி இல்லை

உடுவில், வெள்ளி

மல்லாகம் கிரிக்கட்கோஷ்டிக்கும் வளலை கிரிக்கட்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஒரு கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முதலாட்டத்தில் மல்லாகம் கோஷ்டி சகல விக்கட்களையும் இழந்து 56 ஓட்டங்களையும் வளலை கோஷ்டி 63 ஓட்டங்களையும் பெற்றன. இரண்டாவது ஆட்டத்தில் மல்லாகம் கோஷ்டிசகல விக்கட் நஷ்டத்திற்கும் 54 ஓட்டங்களைப்பெற்றது.

### கிரிக்கெட் போட்டி

துணுக்காய், வெள்ளி

துணுக்காயில் சிரமதான மூலம் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தின் திறப்புவிழாவை முன்னிட்டு வாலிபர்களுக்கும் திருமணமானவர்களுக்கும்கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெற்றது. வாலிபர்கள் கோஷ்டியில் ஆனந்தராசா, புஷ்பநாதன், தனபாலசிங்கம் ஆகியோர் திறமையாக விளையாடினர். திருமணமானவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த ஜெயரத்தினம். கனகலிங்கம், அல்பிறெட் ஆகியோரின் ஆட்டம் திறமையாக இருந்தது. இறுதியில் வாலிபர்கள் கோஷ்டி 3 ரன்களாலும் 4 விக்கட்டுகளாலும் வெற்றியீட்டியது.

### உடற்பயிற்சி போட்டி

கிளிநொச்சி வெள்ளி

கரைச்சிப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளுக்குமான உடற்பயிற்சிப் போட்டி கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் கிளிநொச்சிப்பகுதி வித்தியாதரிசி திரு எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் விசேஷவிருந்தினராக கிளிநொச்சி எம்.பி. திரு. கா.பொ. இரத்தினம் கலந்துகொண்டார்.

திரு. இரத்தினம் பேசும்போது கரைச்சிப்பகுதி விவசாயிகளின் பிள்ளைகள் விவசாயத்துறையில் மட்டுமல்ல உடற்பயிற்சியிலும், விளையாட்டுத்துறையிலும் வல்லவர்களாகத் திகழ்வதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறினுர். போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு திரு. இரத்தினம் சான்றிதழ்கள் வழங்கினுர்.


**2வது வெற்றி வாரம்!**

**இங்ஸ்லி** கொழும்பு **பிளாஸா** வெள்ளவத்தை **நவா** கொம்பனித்தெரு
**விஜயா** மட்டக்களப்பு
மற்றும் நாலு திரைகளில்

**எம். ஜி. ஆர். — சரோஜாதேவி**
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

# தாயின் மடியில்

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வெலிங்டன்**
யாழ்ப்பாணம்

**ஜெமினி கணேசன் — சாவித்திரி**
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த

**வல்லவனுக்கு வல்லவன்**


# செய்திச் சுருக்கம்

### பரிசு

நாவலப்பிட்டி, வெள்ளி

வீட்டுத் தோட்டங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமுகமாக நாவலப்பிட்டி நகரசபையினர் நகர எல்லைக்குள் பயிர்ச்செய்கைப் போட்டியொன்றை நடத்தவிருக்கின்றனர். இந்தப்போட்டியில் அதிக பயிர் செய்பவர்களுக்கு ரூபா 150 முதல் பரிசாக வழங்கபட இருக்கிறது. இதற்கானஏற்பாடுகளை நகரசபைத் தலைவர் திரு. பி. ஏ. டேவிட் பெரேரா மற்றும் அங்கத்தவர்கள் கவனித்துவருகின்றனர்.

ஃ ஃ ஃ

### தளபாடம் இல்லாத பாடசாலை

கனகராயன்குளம், வெள்ளி

1964-ம்வருடத்தில் வீசிய சூறுவளியால் பாதிக்கப்பட்ட அக்கராயன் குடியேற்றத்திட்டத்தின் கீழுள்ள குருசிக்குளம் அரசாங்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் பிள்ளைகள் உட்கார்ந்து படிப்பதற்கு எதுவித தளபாடமுமில்லாதிருக்கிறது. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நிலத்தில் இருந்து கல்வி பயிலவேண்டிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### இளம்பெண் தற்கொலை

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு மத்தியைச் சேர்ந்த பரமேஸ்வரி என்ற 19 வயதுடைய யுவதி, தாயார் கண்டித்ததன் காரணமாக கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். தோட்டத்துக்குள் நின்ற மாட்டைத் துரத்தும்படி தாயார் இவரிடம் கூறியதாகவும், துரத்துவதற்கு நேரமானபடியால் தாயார் இவரைக் கண்டித்ததாகவும், பின்னர் இவர் கிருமிநாசினி அருந்தியதாகவும் மரண விசாரணையின் போது தெரியவந்தது. விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வைத்திலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

ஃ ஃ ஃ

### அபராதம்

வல்வெட்டித்துறை. வெள்ளி

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் குடித்துவிட்டு குழப்பம் செய்த குற்றத்திற்காக அழகக்கோன் சின்னையா என்பவருக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராஜா 25 ரூபா அபராதம் விதித்தார்.

ஃ ஃ ஃ

### தற்காலிக பொலிஸ்நிலையம்

சுழிபுரம். வெள்ளி

காரைநகர்- பொன்னுலைப் பாலத்துக்கருகாமையில் தற்காலிகமாக ஒரு பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காகவே இந்த முகாம் அமைக்கப்பட்டதாக பொலிஸ்பகுதிதெரிவித்துள்ளது. காரைநகரில் இருந்து வரும் சகல வாகனங்களையும் பொலிசார் சோதனை செய்கின்றனர்.

ஃ ஃ ஃ

### கிராமசபையின் கோரிக்கை

கனகராயன் குளம், வெள்ளி

மாந்தைக் காரியாதிகாரிபிரிவு, பனங்காமம் கிராமசபை எல்லைக்கு வெகுதூரத்துக்கு அப்பால் இருப்பதால் வவுனிக்குளம் குடியேற்றத் திட்டத்தினருக்கு உதவுமுகமாக ஒரு காரி[illegible] அமைக்கவேண்டுமெனப் பனங்காமம் கிராமசபை தீர்மானித்துள்ளது.

### ரிமாண்டில் வைக்கப்பட்டார்

சங்கானை, வெள்ளி

சுழிபுரம் காட்டுப்புலம் என்னுமிடத்தில் வீடுடைத்து தங்கநகையும்ரொக்கப் பணமும் களவாடப்பட்டதென சங்கானைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் சார்ஜன்ட் ரி. தாமோதரம்பிள்ளை விசாரணை செய்து எம், கந்தசாமி என்பவரை கைதுசெய்து பணத்தையும், தங்கநகைகளையும் கைப்பற்றி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தார். விசாரணை நடத்திய நீதிபதி திரு. டி.எஸ். நிற்சிங்கா இவற்றைத் திருடியவரெனக் கருதப்படும் கந்தசாமியை இம்மாதம் 19ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஃ ஃ ஃ

### துப்பாக்கிச்சூட்டுக்கு பலி

செட்டிகுளம், வெள்ளி

மூன்றுபிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய நாகூர் என்பவர்துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர். இவர் அப்துல்லா என்பவருடன் காட்டுக்கு துப்பாக்கியுடன்வேட்டையாடச்சென்றதாகவும் அங்கு யானையொன்று துரத்திவந்தபோது இருவரும். ஓடிச்சென்று மரத்தில் ஏறியதாகவும் அப்பொழுது துப்பாக்கி நாகூரின்மேல் தவறிவிழுந்து வெடித்ததால் நாகூர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானுர் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

### மக்கள் முன்னேற்ற மன்றம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

அல்லைப்பிட்டி 10-ம் வட்டாரத்தில் மக்கள் முன்னேற்றமன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பின்வருவோர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- யோ. அந்தோனி முத்து, செயலாளர்-ஞா. செபஸ்டி, பொருளாளர்- எஸ். பிலேந்திரன். எட்டுப்பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

### புகையிலைச் செய்கை

நாரந்தனை, வெள்ளி

இம்முறை தீவுப்பகுதியில் வழமையிலும் பார்க்க புகையிலைச் செய்கை அதிகரித்துள்ளது. நாரந்தனையில் சில பகுதிகளில் புகையிலை வெட்டு ஆரம்பமாகியுள்ளது.

ஃ ஃ ஃ

### யாழ்ப்பாணத்தில் 2 உணவுக்கப்பல்கள்

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது இரண்டு உணவுக் கப்பல்களிலிருந்து இறக்குமதிவேலைகள் நடைபெற்று வருகின்றன.

பனமாநாட்டைச் சேர்ந்த ''அன்டோகோ'' என்ற கப்பல் 6,400 தொன் மாவுடன் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. யாழ்ப்பாணத்திற்கு ஏற்கனவே வந்துள்ள ''யூனிவர்ஸல் ட்ரேடர்'' என்ற உணவுக் கப்பலில் இறக்குமதிவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

### தவறிவிழுந்து மரணம்

கிளிநொச்சி, வியா.

தாய் தந்தையர் சந்தைக்குச் சென்ற சமயம் வாய்க்காலில் மீன்பிடிப்பதற்கு வேறுசில பிள்ளைகளுடன் சென்ற இரண்டுவயது பாலகன் வாய்க்கால் தண்ணீரில் தவறிவிழுந்து மரணமான பரிதாபசம்பவம் கிளிநொச்சியிலுள்ள மூன்றும் வாய்க்காலில் நடைபெற்றது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சேவல் குஞ்சுகள்:
1நாள், 1கிழமை, 1மாதம் 2மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

முட்டைகள்
தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1607

### வாடகைக்கு

வீடு:
யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள 136-ம் இலக்க இல்லம் வாடகைக்கு விடப்படும். விபரங்களை 136-ம் இலக்கத்தில் உள்ளவர்களிடம் அறிந்து கொள்ளவும். 1609

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### கல்வி

இரண்டாம் வகுப்பிலிருந்து S. S. C. வரை, இருபாலர்ருக்கும் தத்தம் இல்லங்களிலேயே திறமையானவர்களைக் கொண்டு எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும். விபரங்களுடன் எழுதுக. S. A. சிவலிங்கம், 117 B, பலாலி ரோட், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 2358

## அபிவிருத்திவேலைபற்றி எம். பி. ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல இடங்களை நேற்று மாலை யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மாநகரசபை விசேஷ கமிஷனர்களுடன்சென்றுபார்வையிட்டு, அப்பகுதிகளில் உள்ள அபிவிருத்தி வேலைகள்பற்றி ஆலோசனை நடத்தினுர்.

கொழும்புத்துறை கிழக்கில், துறைமுகம்வரை குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படியும், விரைவில் குழாய்நீர் வசதிசெய்து கொடுக்கும்படியும், கொழும்புத்துறையில் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத்தரும்படியும், திரு, பொன்னம்பலம் கமிஷனர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கரையூர் வீடமைப்பு திட்டங்களிலுள்ள மலசலகூடங்களைத் திருத்தியமைத்துக் கொடுக்கும்படியும், நாவாந்துறையில் விளையாட்டு மைதானவேலைகளைத்துரிதப் படுத்தும்படியும் கமிஷனர்களிடம் தெரிவிக்கப்பட்டது. பாஷையூரிலும் விளையாட்டு மைதானம் அமைத்துத் தரும்படியும், மீன்பிடி துறைமுகங்களுக்கு இரவில் மின்சார விநியோகம் கிடைக்கும்படி ஒழுங்கு செய்து தரும்படியும் திரு. பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம், தற்செயலாக ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாறன்

[2-பக்கத் தொடர்ச்சி]

குருக்கள்மாரிடம் குறைகள் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகள் அளிக்காவிடில், அவர்களை ஏதோ சம்பள அடிமைகள்போல் நடத்துவதாயின் சிறந்தவர்கள் கூட, சிரத்தை இழந்து விடுதலைபெற்று வெளியேற சமயம் பார்த்துக்கொண்டிருப்பர். கோவிலுக்காகவும் திருவிழாவுக்காகவும் தாராளமாகப் பணம் செலவழிக்க பலர் முன்வருகிறார்கள். ஆனால் கோவில் பூசகர் குறையின்றி வாழ முதலில் வழிசெய்ய வேண்டாமா? இன்றேல் கோவிலால் சமூகத்துக்கு நன்மை எப்படிக் கிடைக்கமுடியும்? சிறப்பாக நடக்கும் கோவில்கள் இங்கு இல்லாமலில்லை. ஆனால் எல்லாக் கோவில்களும் அவ்விதமிருக்கும்படி சமூகம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றே இதை இங்கு எழுத என்மனம் உந்தியது. மற்ற சமய குருமார்கள் நிலைமையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் நிலைமையை நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஃ

மற்றொரு துணை இனி மறுமைக்குங் காணேன், வருத்தலுற்றேன் மறவா வரம்பெற்றேன், சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன், துணையென்று நான் தொழப்பட்ட ஒண்சுடரை, முத்தியும்ஞானமும் வானவரறியா முறைமுறை பலபல நெறிகளுங்காட்டி, கற்பனை கற்பித்த கடவுளை அடியேன், கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[சூழ்ந்துள்ள சுற்றத்தாரையும் துணையென்று நினையாது, 'இவனே துணை' என்று தெளிந்து நாள்தோறும் என்னால் வணங்கப்படுகின்ற ஒளியை உடைய விளக்குப் போல்பவனும் வீடாவதும் ஞானமாவதும் அவற்றை அடைவிப்பனவாய் அமைந்த, தேவராலும் அறியப்படாத அளவற்ற நெறிகளாவனவும் இவை என்பதை அறிவித்து மெய்ப்பொருளை எனக்கு உணர்த்தி அருளிய கடவுளும் ஆகிய பெருமானை அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே திருக்கழுமலம் எனும் இவ்வளநகரில் கண்டு கொண்டேன். அதனால் முன்பு அவனை மறந்து வருந்திய நான் இனி ஒரு போதும் அவனை மறவாதிருக்கும் திருவருளைப் பெற்றேன். ஆகவே இம்மைக்கேயன்றி மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடேன்.]

## இன்று

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 5-ம் திருவிழாவான இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியரின் திருவிளையாடல் கதாப்பிரசங்கத் தொடர் நடைபெறும்.

ஃ

யாழ்ப்பாணம், திருவண்ணை ஸ்ரீகாமாட்சி அம்மன்கோவிலில் மண்டலாபிஷேகமும் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் இன்று நண்பகலில் நடைபெறவிருக்கிறது பின்னர் மகேஸ்வர பூசையும் இரவு அம்பாள் திருவுலாவும் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் கதாகாலட்சேபமும் மற்றும் இன்னிசைக்கச்சேரிகளும் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் நகரில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கினர்.

நேற்றுக்காலை ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கோஷ்டியொன்று திருநெல்வேலி சிவன்கோவிலுக்கு வந்து கிணற்றில் கால்கழுவிக்கொண்டு வாசலையடைந்தனர். இக்கோஷ்டியில் சுமார் 25 பேர் இருந்தனர். ஐக்கிய முன்னணித் தலைவர்களான, திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. ஜி. நல்லையா ஆகியோர் கோவிலுக்குச் சற்று அப்பால் நின்றனர். இக்கோஷ்டிக்கு ஆதரவாக, நல்லூர், திருநெல்வேலி, முடமாவடி, பண்டாரக்குளம் வாசிகளும் சுமார் 200 பேர் அங்கு வந்தனர். இவர்கள் வருவதற்குமுன்பு மூன்று 'ஜீப்'களிலும், கார்களிலும் பொலிசார் கோவிலுக்குவந்திருந்தனர்.

கோவில் கதவு மூடப்பட்டிருந்ததால், 'ஐயா. ஐயா. என அழைத்து அர்ச்சனை செய்ய வந்திருப்பதாகத் தெரிவித்தனர். ஆனால் மூடிய கதவு திறக்கப்படவில்லை. சிறிது நேரத்தால் அக்கோஷ்டி அருகில் உள்ள அம்மன்கோவிலுக்குச் சென்றது. அக்கோவில் கதவும் மூடப்பட்டிருந்ததால் திரும்பிச் சென்றனர்.

பாதிவழி சென்றபின் கோவில்கதவு திறக்கப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்று மீண்டும் திரும்பி வந்த போது, அங்கு கதவு மூடப்பட்டிருந்தது. அர்ச்சகர் வெளியில் சென்றுவிட்டதாக அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர். கோவில் ஏன் பூட்டப்பட்டிருப்பதாக அக்கோஷ்டியிலுள்ளவர்கள் கேட்டனர். ஆனால் எவரும் பதிலளிக்காததால் மீண்டும் திரும்பிச் சென்றனர். பொலிசார் அவர்களைப் பின்தொடர்ந்து செல்லவில்லை.

இக்கோஷ்டிநேராகவீரமாகாளியம்மன் கோவிலுக்குள் சென்று வழிபாடு செய்தனர். இக்கோவில் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த போதிலும், இதுவரை சிறுபான்மைத் தமிழர்களுக்காகத் திறந்துவிடப்படவில்லை,

நேற்று நண்பகல் மீண்டும் அங்குசென்ற போது சிவன் கோவில் வாசலில் ஐயர் ஒரு கதவை மட்டும் திறந்துகொண்டு உட்காந்திருந்தார். பொலிஸார் அங்கு காணப்படவில்லை. நான் அவர் இருந்த இடத்தை நோக்கிச் சென்றதும், அவர் எழுந்து கதவை மூடினார். நான் யார் என்பதை அவருக்கு தெரிவித்தபின்னர் பழையபடி உட்கார்ந்துவிட்டார். அங்கு வழிபட வந்தவர்கள் வெளிவாசலில் நின்றே வணங்கினர். அர்ச்சகருக்கு அறிமுகமானவர்கள் மட்டுமே உள்ளே சென்று வழிபட்டனர்.

வீரமாகாளியம்மன் கோவிலில் நேற்று நண்பகல் வழக்கம்போல மக்கள் சென்று வழிபட்டனர். எவ்வித மாற்றத்தையுமே காண முடியவில்லை. திருநெல்வேலி அம்மன்கோவில் பூட்டப்பட்டிருந்தது.

வீரமாகாளியம்மன் கோவில் அர்ச்சகரைப் பின்பற்றி மற்றும் கோவில் அர்ச்சகர்களும் சிறுபான்மைத் தமிழர் வழிபட கோவில்களைத் திறந்துவிடுவார்கள் என எதிர்பார்ப்பதாக ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## மொரார்ஜி போட்டி

புதுடில்லி. மார்ச் 10

பிரதமர் பதவிக்குத் தாம் போட்டியிடுவது என்ற முடிவைத் தாம் மாற்ற முடியாதென்று திரு. மொரார்ஜி தேசாய் இன்று நண்பகல் அறிவித்தார்.

## 'மாலைகள் தேவையில்லை'

—ஜி.ஜி

யாழ்ப்பாணம், சனி

மாலைகள், மேளங்கள் அவசியமில்லை. பந்தல்கள்' ஜோடனைகளால் பயனெதுவுமில்லை. குறிப்பிட்ட ஓர் இடத்தில் என்னை அழைத்து உங்கள் கோரிக்கைகளை தெரிவித்தால் நிறைவேற்றி வைப்பேன்.

கொழும்புத்துறை கிழக்கு மக்கள் சரர்பில் துரையப்பா வித்தியபதயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்,

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது இப்பகுதிக்கு விரைவில்குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் படி, கமிஷனரிஎம் தெரிவித்துள்ளேன். இப்பாடசாலைக்கு முன்னால் உள்ள குளத்தை நிரப்பி ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க முயற்சி எடுப்பேன்.

இப்பகுதியில் வீடில்லாத காணியில்லாத மக்களின் விபரங்களை எனக்குத் தந்தால் நான் வீடமைப்பு மந்திரியுடன் தொடர்பு கொண்டு, இப்பகுதியில் ஒரு வீட்டமைப்புத் திட்டம் ஆரம்பிப்பது பற்றி பேச்சு வார்த்தை நடத்துவேன். இன்னும் சிலமாதங்களில் இங்கு ஒரு தச்சுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. ஏற்கனவே இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நெசவுசாலைக்கு வேண்டிய வசதிகள்செய்து தருவேன்.

தலைமையாசிரியர்திருசெல்வராசா பேசும்போதுஇப்பாடசாலைக்குதிரு.பொன்னம்பலம் ஏற்கனவே 5000 ரூபா ஒதுக்கியுள்ளதால், மாணவர்களுக்குப்பலவசதிகள் ஏற்பட்டுள்ளதாகவும், இங்கு விஞ்ஞானபாடம் போதிக்க விஞ்ஞான உபகரணங்கள் பெற்றுத் தரும்படியும் கேட்டுக்கொண்டார். திரு. தம்புகந்தையா உட்படப் பலரும் பேசினர்கள்.

## திடீர் ஊர்வலம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்து கலைத்தனர்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியினர், நேற்று மாலை நடைபெற்ற ஊர்வலத்துக்கு மட்டுமே அனுமதி பெற்றிருந்தனரென்றும், நேற்றுக்காலைநடத்தத் திட்டமிட்டிருந்த ஊர்வலத்திற்கு அனுமதி பெறவில்லையென்றும் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை புகையிரத நிலயத்தைநோக்கி, சிவப்பு, நீலக் கொடிகளைத் தாங்கி சுமார் 300 வாலிபர்கள் சைக்கிளில் வந்தனர். இவர்களைத்தொடர்ந்து பல கார்களும் அங்குவந்துசேர்ந்தன.

புகையிரத நிலையத்திலிருந்து முன்னள் மந்திரி மகமூதையும், அவருடன் வந்த கோஷ்டியையும் ஊர்வலமாக அழைத்துச்செல்லமுற்பட்டபோது அங்கு நின்ற பொலிஸ்கோஷ்டியினர் அவர்களைத் தடுத்துநிறுத்தினர். அவர்கள் தொடர்ந்து ஊர்வலமாகச்செல்ல முற்பட்ட போர்து பொலிஸார் அக்கூட்டத்தைக் கலைத்தனர். ஊர்வலத்திற்கு அனுமதியளிக்கப்படவில்லையென்றும் கலைந்து செல்லுமாறும் பொலிசார் கேட்டுக்கொண்ட போதும் அவர்கள் அதை மீறி ஊர்வலம்செல்ல முயன்றபோதே பொலிசார்ஊர்வலத்தைக் கலைத்தனராம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## துரையப்பா மனு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேயர் திரு.அல்பிரட் துரையப்பாபிரிவிக்கவுன்சிலுக்குச் செய்துகொண்ட மனுவைத் தள்ளுபடி செய்த நீதியரசர்கள் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையை உள்ளூராட்சி மந்திரி கலைத்ததை ஆட்சேபித்து முன்னாள் மேயர் திரு. துரையப்பா இலங்கைச் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடிசெய்தது. அதை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டின் அப்பீல் கோர்ட்டுக்கு திரு. துரையப்பா மனுச்செய்தார். அங்கும் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனையும் ஆட்சேபித்து அவர் பிரிவிகவுன்சிலுக்கு மனுச்செய்தார்.

பிரிவிக்கவுன்சில் நீதியரசர்கள் மனுவின்மீது விசாரணை நடத்தித் தள்ளுபடி செய்து அதற்கான காரணங்களைப் பின்னர் அறிவிப்பதாக அறிவித்திருந்தார்கள். அந்தக் காரணங்களை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள்.

கலைக்கப்படுமுன் மாநகர சபையின் கருத்துக்களையும், மந்திரி அறிய முயன்றிருக்க வேண்டும். அப்படி அறிந்த பின்னர் கலைக்கப்பட்டிருப்பின் கீழ்க்கோர்ட்டின்தீர்ப்பைத் தள்ளுபடிசெய்திருக்க முடியும். இந்நிலையில் முடிக்குரியதரப்புக்கான செலவுத் தொகையை நாங்கள் அனுமதிக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்

பிரிவிக்கவுன்சில் நீதிபதிகள் தமதுதீர்ப்பில், மனுதார் தமக்கு மனுச்செய்வதற்குத் தகுதியிருக்கின்றது என்று கூறியுள்ளார். ஆனல் அவர் கலைக்கப்பட்டசபையின் சார்பில் மனுசெய்வதாக ஸ்தாபிக்கவில்லை. சபைகலைக்கப்பட்டவுனே அவர் தமது மேயர் பதவியை இழந்துவிட்டார் என்று தெரிவித்திருப்பதுடன், இந்தக்காரணங்களால் மனுவைத் தள்ளுபடிசெய்து தீர்ப்பளிப்பதாகத்தெரிவித்துள்ளனர்.

## தேர்தல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டத்தில் ஜனப் பதியுதின் முகமத் மேலும் கூறியதாவது: தேசிய அரசாங்கம் என்றென்றும் ஆட்சி புரியும் என்று எண்ணுவது தவறு சுதந்திர நாட்டில்ஜனநாயக முறைப்படி நடைபெறும் தேர்தலில் ஆட்சியில் மாற்றம் ஏற்படும். அதைதடுக்க யாராலும் முடியாது. இன்று காலை பொலிஸார் நடந்து கொண்டவிதம் வருந்தக் கூடியது. ஆட்சியில் மாற்றம் ஏற்படும் என்பதை மனதில் வைத்து அவர்கள் நியாயத்துடன் கடமையாற்ற வேண்டும்.

### எஸ். பி.க்குப் பாராட்டு

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரிண்டன்ட் திரு. சுந்தரலிங்கம் கருணைகாட்டி அனுமதி தந்ததினால்தான் இக்கூட்டம், ஊர்வலமும்நடத்த முடிந்தது. மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும், அவரின் வழியைப் பின்பற்றி அன்புடன் நடந்திருந்தால் இந்த விழா இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

இந்நாட்டில் 1200 வருடங்களாகச் சிறப்புடன் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் கடந்த 50 வருடமாக கல்வி பொருளாதாரத்தில்பின் தங்கியுள்ளார்கள். இவர்கள் மீண்டும் பழைய நிலையை அடையவே இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியை உருவாக்கினேம்.

## பொலிஸ் காவல்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி சிவன் கோவிலில், பொலிஸாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து நேற்று இரவு வரைகோவிலில் பொலிஸார் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்காக கோவிலில்காவல்புரிந்தனர்.

பூசைகளின் போதும் கோவில் கதவு மக்களின் வழிபாட்டிற்காக திறந்து விடப்பட்டதால், அச்சமயங்களில் இன்ஸ்பெக்டர் சகாயம் தலைமையில் பொலிஸ் கோஷ்டி யொன்று கோவிலில் காணப்பட்டது.

நேற்று மாலை, இரவு பூசை நேரங்களில் வழக்கம்போல் இக் கோவிலில் பொது மக்கள் சென்று வழிபாடு செய்தனர்.

## பவுடர்ரின்னுக்குள் கைக்கடிகாரம்

### பிரயாணி சிக்கினர்

மாவிட்டபுரம், வெள்ளி

பவுடர்ரின்னுக்குள் வைத்த 500 பெறுமதியான கைக்கடிகாரங்களையும் 500 ரூபாய் பெறுமதியான தங்க நகைளை இடுப்பிலும் மறைத்துக்கொண்டுஎடுத்துச்செல்ல முயன்ற ஒரு பிரயாணியை பலாலிவிமான நிலையத்தில் அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்கள்.

சுன்னாகத்தை சேர்ந்தவரும் டி. ஆர். பி. சாரரும் என்றுகருதப்படும் அவருக்கு சுங்க அதிகாரிகள் ஆயிரம் ரூபாய் அபரரதம் விதித்ததுடன் அவரிடமிருந்த பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

## புதிய நிர்வாகிகள்

கிளிநொச்சி, வியா.

கணேசபுரம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. ஆ. ஏரம்பு தலைமையில் நடைபெற்றது. தற்போது ஏற்பட்டிருக்கும் உணவுக்கஷ்டத்தை உப உணவு உற்பத்திமூலம்நிவர்த்திசெய்யவேண்டிய ஆலோசனைகளை ஐக்கிய பரிசோதகர் எடுத்துரைத்தார். மற்றும்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- இ. நடராசா, உப தலைவர்- கோ. ஏரம்பமூர்த்தி, காரியதரிசி- கே. மயில்வாகனம். மற்றும் ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## நோயாளர் அவதி

வவனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் புயலால் பாதிக்கப்பட்ட கட்டடம் இதுகாலவரை திருத்தப்படாதிருப்பதால் இங்கு நோயாளர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

## பார்லிமெண்டில் கிளப்பப்படும்

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி வாலிபர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் நடத்திய யாழ்ப்பாணப் பொலிசாரின் அட்டூழியம் பற்றி அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் மூதூர் எம். பி. அப்துல் மஜீத் கேள்வி எழுப்பப்போவதாக ஜின்னா மைதானத்தில் நடந்த கூட்டத்தில் கூறினர்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் பற்றி அடுத்த செனட்சபைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்போவதாக இக்கூட்டத்தில் செனட்டர் ஹமீத் கூறினர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org